NUS
National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p3
**Date:** 10 April 2017

# ‘புரோ போனோ’ விருது பெற்ற சட்டத்துறை மாணவர் பிரபு தேவராஜ்

ஐஸ்வர்யா மாணிக்கவாசகம்

‘ஷரியா’ சட்டம் என்னும் இஸ்லாமிய சட்டத்தை ஆராய்ந்து, இஸ்லாமியர்களின் தனித்துவ உரிமைகளைப் பாதுகாப்பதற்காக மாணவர்களால் தொடங்கப்பட்ட ஒரு குழு முயற்சிக்கு ‘ப்ரோ போனோ’ விருது பெற்றுள்ளார் பிரபு தேவராஜ்.

இந்தக் குழு முயற்சிக்கு சிங்கப்பூர் தேசியப் பல்கலைகழக ‘புரோ போனோ’ குழு, இஸ்லாமிய சங்கம், ஐஆர்பி என்னும் சட்ட நிறுவனம் ஆகியன ஆதரவு தெரிவித்துள்ளன.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகம் நடத்திய 25வது ‘புரோ போனோ’ விருது நிகழ்ச்சியில் அந்த விருதைப் பெற்றார் திரு பிரபு.

ஒரு துறையைச் சார்ந்தவர்கள், வசதி குறைந்த மக்களுக்குச் சேவை செய்யும்போது அதை அங்கீகரிக்கும் விதத்தில் ‘புரோ போனோ’ விருது வழங்கப்படுகிறது.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்தின் சட்டத் துறையில் இரண்டாம் ஆண்டு பயிலும் திரு பிரபு, ‘புரோ போனோ’ விருதைப் பெறுவது இதுவே முதல் முறையாகும்.

‘ஷரியா’ சட்டம் சிங்கப்பூரில் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்ற விவரங்களுடன் தேசியப் பல்கலைக்கழக மாணவர்கள் ‘நேவிகேட்டிங் ஷரியா லா இன் சிங்கப்பூர்’ எனும் புத்தகத்தை இம்மாணவர் குழு வெளியிட்டுள்ளது.

குடும்ப வன்முறை, இணையத்தின் மூலம் அச்சுறுத்தல் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சட்ட விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளார் பிரபு.



ஷரியா சட்டத்தை ஆராய்ந்து இஸ்லாமியர்களின் தனித்துவ உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட ஷரியா சட்ட மன்றக் குழுவில் அங்கம் வகிக்கும் பிரபு தேவராஜ், அவரது குழுவினர் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்தின் ‘புரோ போனோ’ விருது பெற்றனர். **படம்: பெரித்தா ஹரியான்**

அதோடு, கொலை, போதைப் பொருள் கடத்தல் போன்ற வழக்குகளில் சிக்கிக்கொண்ட முன்னாள் கைதிகளுக்குச் சட்டப்படி தன்னால் முடிந்த உதவியைச் செய்திருக்கிறார் அவர்.

அதுமட்டுமின்றி, தூக்கு தண்டனை குறித்து அனைத்துலக நீதிமன்றம் நடத்திய மன்ற விவாதத்திலும் கலந்துகொண்டுள்ளார் பிரபு.

சட்டத் துறையைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்னால் நாடகக் கலையில் அதிக ஈடுபாட்டுடன் இருந்ததாகச் சொன்னார் பிரபு.

வசந்தம் தொலைக்காட்சியின் ‘குரு பார்வை’ என்னும் நாடகத்தில் துணை நடிகராக முதன்முதலாக நடித்திருந்தார் அவர்.

சமூக நீதியைப் பற்றிய ‘லாரமி புரொஜெக்ட்’ என்னும் ஆங்கில நாடகத்தில் சில முக்கிய கதாபாத்திரங்களிலும் அவர் நடித்துள்ளார்.

பிரபுவின் தந்தை வாடகை உந்துவண்டி ஓட்டுநராகவும் அவரது தாயார் ஆசிரியராகவும் பணியாற்றுகின்றனர்.

வசதி குறைந்த குடும்பப் பின்னணி கொண்டிருந்தாலும் படிப்பில் மிகுந்த கவனம் செலுத்தி உயர்வதுடன் சமுதாயத்துக்கு உதவியும் வருகிறார் பிரபு.

எதையும் ஆழமாகச் சிந்திக்கும் பழக்கம் இருப்பதாகச் சொன்ன பிரபு, அதன் காரணமாகவே தமக்கு சட்டப் படிப்பில் ஆர்வம் ஏற்பட்டதாகச் சொன்னார்.

“சட்டத்துறையில் பயிலும்போது, சமுதாயத்திற்கு என்னால் முடிந்தவரை உதவி செய்ய முடிகிறது என்று நினைக்கும்போது, அது எனக்கு உற்சாகத்தையும் மனநிறைவையும் அளிக்கிறது’’ என்று குறிப்பிட்டார் திரு பிரபு.

‘புரோ போனோ’ பணியில் ஈடுபடுவது தொண்டூழியம் என்று குறிப்பிட்ட தேசியப் பல்கலைக் கழகம், சட்டத் துறையில் பயிலும் மாணவர்கள் உலக அனுபவங்களைப் பெறுவது இன்றியமையாதது என்று குறிப்பிட்டது.

“சட்டத் துறை நிபுணராக இருக்கும் ஒருவருக்கு இருக்க வேண்டிய சமூகப் பொறுப்புணர்வை மாணவர்கள் பெறுவதற்கும் உதவி தேவைப்படுவோரது வாழ்வில் தம்மால் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதை அவர்கள் உணர்ந்துகொள்வதற்கும் புரோ போனோ பணி அவசியம்,” என்றார் தேசியப் பல்கலைக்கழக சட்டத் துறைத் தலைவர் சிமன் செஸ்டெர்மேன்.

இவ்வாண்டு நான்கு பிரிவுகளில் தனிநபர்களுக்கு புரோ போனோ விருதுகள் வழங்கப்பட்டன.

‘புரோ போனோ’ முன்னோடி விருது, ‘புரோ போனோ’ வழிகாட்டி விருது ஆகிய இரு புதிய விருதுகள் இவ்வாண்டு அறிமுகப்படுத்தப்பட்டன.

நான்கு திட்டப்பணிகள் நிதி உதவி பெற்றன. அவற்றுள் பிரவின் குழு, ‘என்யுஎஸ் லா கிளாஸ் ஆஃப் 1992’ ‘புரோ போனோ’ விருதின் கீழ் நிதி உதவி பெற்றது.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஷரியா சட்ட மன்றத்தை அவரது குழு வழி நடத்தும்.

அந்த நிகழ்ச்சி ஆர்வமுள்ள மாணவர்கள், சட்ட வல்லுனர்களுக்கு ஷாரியா சட்டம் பற்றிய புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்காக நடத்தப்படவுள்ளது.

இஸ்லாமியர்களின் ஷாரியா சட்டம் பற்றிய தவறான கண்ணோட்டத்தை மாற்றி அதன் மீதான உரையாடலை ஊக்குவிப்பதே அந்த மன்றத்தின் நோக்கம்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.